# சித்தர் பாடல்களில் தனிமனித ஒழுக்கச் சிந்தனைகள்

*முனைவர் க. கல்யாணசுந்தரி*
உதவிப் பேராசிரியர் (தமிழ்த்துறை)
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி
புளியங்குடி, தென்காசி மாவட்டம்

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மார்ச்
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.5281/zenodo.14958685

## முன்னுரை

தமிழில் காலந்தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவும் குறிப்பிடத்தக்கது. சித்தர் இனம் நீண்ட நெடுங்காலமாக இந்த நிலத்தில் வேரூன்றி விழுது பரப்பி வருகிறது. "மூலன் மரபில் வந்த நான் ஒரு சித்தன்" என்று பாரதி தன்னைச் சித்தர் பரம்பரையில் இணைத்துக் கொண்டு பெருமைப்படுகிறார். பட்டினத்தாரும், தாயுமானவரும், வள்ளலாரும் சித்தர் தத்துவங்களைக் கோட்பாடுகளாக்கிக் கொடுத்தவர்கள் என்பதனை இலக்கிய வரலாறுகள் இயம்புகின்றன. உள்ளொளி பெற்ற சித்தர்கள் உண்மையை உணர்ந்து ஊருக்கு உபதேசம் செய்தனர். மெய்ஞ்ஞானம் மேவியோர் மேதினியில் ஐம்புலன் நுகர்வுகளை, ஆசாபாசங்களை, நலந்தீங்குகளை, அவலங்களைத் தத்துவப் பாடல்களாக வகுத்தனர். புரியும் மொழி, புரியாத கருத்துக்கள் பேச்சு வழக்குத் தமிழில் பேருண்மைகளைப் பொதிந்து வைத்துள்ளனர். முப்பாழ், சாதிக் குதிரை, மாங்காய்ப்பால், தேங்காய்ப்பால் என்பன போன்ற குறியீட்டுச் சொற்களும் பல்வகைக் கருத்துக்களுக்கு இடமளிக்கின்றன. சித்தர்கள் கையாண்ட குறியீட்டுச் சொற்களுக்குத் தனி அகராதியே தேவைப்படுகிறது. கருத்து நுட்பங்கள் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் சித்தர் பாடல்கள் போற்றப்பட்டு வந்துள்ளன. மேன்மைமிக்க சித்தர்கள் பாடல்களில் தனிமனித ஒழுக்கச் சிந்தனைகளை முன்னெடுப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## சித்தர் இலக்கியச் செழுமை

சித்தர் இலக்கியம் தமிழில் தனிவகை இலக்கியம் குறியீட்டு இலக்கியம்' காலந்தோறும் வளர்ந்த கலை இலக்கியம் தத்துவ இலக்கியம். இலக்கிய மதிப்பையும், இலக்கிய அந்தஸ்தையும், அறிஞர்களின் அங்கீகாரத்தையும் பெறா விட்டாலும், சித்தர்களின் நுண்ணுணர்வு, ஆழ்நிலை எண்ணங்கள், வெடிப்புறு சிந்தனைகளில் வீசும் அலைகள் பொறி போலச் சுடர்விடுகின்றன. சித்தர்களின் சிந்தனை வளமும், கருத்துக் கொடைகளும், எண்ண விரிவுகளும் தவஞானியர்களின் சிந்தனை எச்சங்களாக மொழியைச் செழுமைப்படுத்தி உள்ளன.

மொழியாலும் நடையாலும் பாடல் வடிவத்தாலும் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு சித்தர் இலக்கியத்திற்குச் செழுமை சேர்ந்துள்ளது. பேசாப் பொருளை அவர்கள் பேசியுள்ள திறமும் உயிர் இயல்பை உணர்த்திய திறமும் யோகத்தின் ஒருமையினை, பெருமையினைப் பேசிய திறமும் பெருந்திறமாகும். “கள்ளிக்கு என்ன வேலி?” எனக் கேட்கும் கருத்து வெளிப்பாடும், கவிதை அழகும் நினைத்து நினைத்து இன்புறத்தக்கன.

### சித்தர்கள் பணிகள்

சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதோடு நில்லாமல், உலக மக்களையும் உயர்த்துவதற்குப் பல பணிகள் செய்தனர். சித்தர்கள் மக்களின் மன இருளைப் போக்கி ஞானஒளி பரப்பச் சிந்தனைச் செல்வத்தை வாரி வழங்கினர். உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகளைத் தெரிவித்து நூல்கள் இயற்றினர். கோள்களின் நிலை, காலமாறுபாடு, சுடர்களின் இயக்கம் ஆகியவற்றை விளக்கிச் சோதிட நூல்களை யாத்தனர். நிறைமொழி மாந்தர்களாகிய அவர்கள் மறைமொழிகளை மந்திரம் என்ற பெயரால் வழங்கினர். மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும், கூர்மையாக்கவும், வெளிப்படுத்தவும், மாந்திரிகங்களையும் வெளியிட்டனர். தெய்வங்களுக்கு முறைப்படி பூசைகள் செய்ய பூசை விதிகள் பற்றிய பாடல்களைப் பாடித் தந்துள்ளனர். யோக சக்தி, ஆத்ம சக்தி ஆகியவற்றை விளக்கி இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இவை யாவும் கலந்த தொகுதியாகவே “சித்தர் பாடல்கள்” வெளிப்படுகின்றன.

### சித்தர் நெறி

சித்தர்கள் யாவரும் மனித நேயம் மிகுந்தவர்கள். சாதி சமய வேறுபாடு அற்றவர்கள். சமரச சன்மார்க்கத்தைப் போற்றுபவர்கள். போலிச் சடங்குகளையும், பொருளற்ற செயல்களையும், மூடநம்பிக்கைகளையும் கண்டிப்பவர்கள். மனித வாழ்வு மிக உயர்ந்ததென்று கருதுகின்றனர். உடம்பைப் பேணிக் காக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். மனிதன் சிற்றின்பத்தில் மூழ்கி சீரழியக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றனர். யாக்கை நிலையற்றது செல்வம் நிலை இல்லாதது. இளமை நிலை பெறாதது என்று இடித்துரைக்கின்றனர்.

மனம் தூய்மை இன்றிச் செய்யும் தெய்வ வழிபாடு பயன் தராது பொய், களவு, கொலை, கோபம், கள், காமம் ஆகியவை மனித இனத்தை நாசமாக்கி வீழ்த்திவிடும். “கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழும் வாழ்க்கை பயனற்றது எல்லாம் வல்ல - எங்கும் நிறைந்த இறைவனை மன மொழி மெய்களால் போற்ற வேண்டும் அன்பு, இரக்கம், தொண்டு ஆகியவற்றைக் கொண்டவர்கள் வாழ்வே சிறந்தது - இவையே சித்தர் பின்பற்றிய நெறிகள். உலகிற்கு உணர்த்திய நெறிகள்.

### உடல் ஓம்பல்

மனிதப்பிறவி அரியது என்றும், உடல் இறைவனின் திருக்கோயில் என்றும் சித்தர்கள் கூறுகின்றனர். அத்தகைய அரிய உடலைச் சிலர், காமக் களியாட்டங்களில் ஈடுபட்டுப் பாழாக்கி விடுகின்றனர் என்றும் அவர்கள் இரக்கப் படுகின்றனர்.

**“ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே - இதை**
**உப்பிட்ட பண்டம் என்று எண்ணாதே!”**
**- கொங்கணசித்தர்**

**“நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்**
**கூத்தாடிப் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!”**
**- கடுவெளிச்சித்தர்**

### அறிவுரைகள்

சித்தர் சொல்லியுள்ள பல வகையான அறிவுரைகள் தனிமனித ஒழுக்கக் கோட்பாடு களாக வெளிப்படுகின்றன.

**“குரு மார்க்கம் இல்லாக்**
**குருடருடன் கூடிக்**
**கரு மார்க்கத் துள்ளே**

*கருத்தழிந்து கெட்டேனே!*
*மண் பெண் பொன் னாசை*
*மயக்கத்திலே விழுந்து*
*கண் கெட்ட மாடது போல்*
*கலங்கினேன் பூரணமே!"*

*- பட்டினத்தார்*

*"ஆங்காரம் உள்ளடக்கி*
*ஐம்புலனைச் சுட்டறுத்துத்*
*தூங்காமல் தூங்கிச்*
*சுகம் பெறுவது எக்காலம்?*
*பேய் போல் திரிந்து பிணம்போல்*
*கிடந்து பெண்ணைத்*
*தாய் போல் நினைத்துத்*
*தவம் முடிப்பது எக்காலம்?"*

*- பத்திரகிரியார்*

*"தன்வீடு இருக்க அயல்வீடு போகாதே!*
*தாயார் தகப்பனை வையாதே!"*

*- கொங்கணசித்தர்*

*"தாடி வளர்த்துச் சடை வளர்த்து - நல்ல*
*சன்யாசி என்றொரு வேடமிட்டே*
*ஓடித் திரிந்த விளையாட்டை - இங்கே*
*ஒப்புவது ஆரடி ஞானப் பெண்ணே!*
*பித்துப் பிடித்த மனக் குரங்கு - வெறிப்*
*பேயும் பிடித்துக் கொண்டு ஆட்டமிட்டால்*
*அத்தை அடக்க மருத்து செய்தால் - பரி*
*அன்று நடத்தலாம் ஞானப் பெண்ணே!*
*கள்ளுண்டு தள்ளுண்டு நில்லாதே - பின்பு*
*கஞ்சா உறக்கமும் கொள்ளாதே!"*

*- வாலைசாமி*

சித்தர்கள் கூறிய அறிவுரைகளை நோக்கினால் அவர்கள் நெறி, உலக மக்கள் அனைவர்க்கும் ஒழுக்கத்தைப் பொதிக்கும் நன்னெறி என்பதை உணர முடிகிறது.

## கடுஞ்சொல்லும் வெளிப்படையும்

சமுதாய மக்களிடையே தமது புதுக்கொள்கை களையும், புரட்சிச் சிந்தனைகளையும் எளிதில் சென்று பரவ வேண்டும் என்று விரும்பிய சித்தர்கள், தம் பாடல்களில் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தினர். எல்லாவற்றையும் வெளிப்படையாகவும், நேரடியாகவும் கூறினர்.

## சிவவாக்கியர்

*"புத்தகங்களைச் சுமந்து*
*பொய்களைப் பிதற்றுவீர்!"*
*"கோயிலாவது ஏதடா!*
*குளங்கள் ஆவது ஏதடா!*
*கோயிலும் குளங்களும்*
*கும்பிடும் குலாமரே!"*

என்றும் பாடுகிறார்.

உயர் குடிப் பிறப்பால் - குளித்தல், உண்ணுதல் முதலியவற்றால் தம்மை உயர்வாகக் கருது வோரைப் பின்வருமாறு அவர் கேட்கின்றார்.

*"காலை மாலை நீரிலே*
*முழுகும் மந்த மூடர்காள்!*
*காலை மாலை நீரிலே*
*கிடந்த தேரை என் பெறும்?*
*ஆட்டிறைச்சி தின்றதில்லை*
*அன்றும் இன்றும் வேதியீர்!*
*ஆட்டிறைச்சி அல்லவோ*
*யாகம் நீங்கள் ஆற்றலே!*
*மான் இறைச்சி தின்றதில்லை*
*அன்றும் இன்றும் வேதியீர்!*
*மான் உரித்த தோல்அலோ*
*மார்பு பூணூல் அணிவதும்?*
*பறைச்சி ஆவது ஏதடா!*
*பனத்தி ஆவது ஏதடா!*
*பறைச்சி போகம் வேறதோ!*
*பனத்தி போகம் வேறதோ!"*

*- சிவவாக்கியர்*

## வாலைச்சாமி சித்தர்

தத்துவங்களைக் குப்பை என்றும், வேத சாத்திரங்களைப் பொத்தல் என்றும் வாலைச் சாமி பாடுகின்றார்.

*தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி - வேத*
*சாத்திரப் பொத்தலை மூடுங்கடி!*

என்று சாத்திரங்களைச் சாடுகின்றனர். மேலும்,

*காமன் எவர்க்கும் மூத்தவனாம் - அவன்*
*கற்றிடும் வித்தைகள் மெத்த உண்டாம்!*

***பூட்டைத் திறப்பதும் கையாலே - மனப்***
***பூட்டைத் திறப்பது மெய்யாலே!***

என்று மனித ஒழுக்கங்களை உணர்த்திப் பாடுகின்றனர்.

### பட்டினத்தார்

***இருப்பது பொய் போவதுமெய் என்று***
***எண்ணி நெஞ்சே***
***ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே!***
***பிறக்கும் பொழுது கொடுவந்தது இல்லை!***
***இறக்கும் பொழுது கொடுபோவது இல்லை!***

என்று பிறருக்குத் தீங்கு செய்யாது வாழவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியுள்ளார். மேலும், அவர் தன் மனத்திற்குச் செய்த உபதேசமாக,

***ஒன்றென்று இரு தெய்வம் உண்டு***
***என்றிரு உயர் செல்வம் எல்லாம்***
***அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்***
***நல்லறமும் நட்பும்***
***நன்றென்றிரு நடு நீங்காமே***
***நமக்கு இட்டபடி***
***என்றென்றிரு! மனமே!***
***உனக்கு உபதேசம் இதே!***

என்று பாடியுள்ளார். உலக மதங்களுக்கெல்லாம் பொதுவான கருத்தை இந்தப் பாடல் கூறுவதால், அது என்றும் வாழும் எல்லார் உள்ளத்திலும் சென்று நிலை பெறும்' உலக உறவு கொள்ளும்!

### இடைக்காடர்

***"மனமென்னும் மாடு அடங்கில்***
***தாண்டவக்கோனே! -முத்தி***
***வாய்த்தது என்று எண்ணேடா***
***தாண்டவக்கோனே!***
***எல்லாம் இருந்தாலும் - பசுவே!***
***ஈசர் அருள் இலையேல்***
***இல்லாத் தன்மை என்றே - பசுவே!***
***எண்ணிப் பணிவாயே***
***சாவாது இருந்திடப் பால் பற! - சிரம்***
***தன்னில் இருந்திடும் பால் பற!***
***பெட்டியின் பாம்பெனப் பேய்மணம் அடங்க***
***ஒட்டியே ஊது குழல்! - கோனே***
***ஒட்டியே ஊது குழல்"!***

மனத்தை எவ்வாறு அடக்கிப் பேண வேண்டும் என்றும், அதனால் ஈசன் அருள் கிட்டும் என்றும் உணர்த்துகிறார்.

### அகப்பேய்ச் சித்தர்

***"உன்னை அறிந்தக்கால் - அகப்பேய்***
***ஒன்றையும் சேராயே"***

என்று பாடுகின்றார்.

### கடுவெளிச் சித்தர்

***"நல்ல வழிதனை நாடு - எந்த***
***நாளும் பரமனை நத்தியே தேடு!"***
***"மெஞ்ஞானப் பாதையில் ஏறு - சுத்த***
***வேதாந்த வெட்ட வெளியினைத் தூறு!"***
***"வைதாரைக் கூட வையாதே - இந்த***
***வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே!"***
***"கஞ்சாப் புகைபிடி யாதே - வெறி***
***காட்டி மயங்கியே கட்குடி யாதே!"***

### கொங்கண சித்தர்

***"வீணாசை கொண்டு திரியாதே - இது***
***மெய்யல்ல பொய்வாழ்வு பொய்க்கூடு!***
***தேசாந்திரங்களும் செல்லாதே - மாய்கைத்***
***தேவடியாள் தனம் பண்ணாதே!"***

### முடிவுரை

கட்டற்ற வாழ்க்கையும், எல்லையற்ற நோக்கும், எதனையும் எடுத்தெறிந்து பேசும் இயல்பும் சித்தர்பாடல்களில் ஒலிக்கின்றன. மொழியாலும், நடையாலும், பாடல் வடிவத்தாலும் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு சித்தர் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த்துள்ளது. பேசாப் பொருளை அவர்கள் பேசிய திறமும் வியக்கத்தக்கதாகவே உள்ளது. யாப்புக் கட்டுக்குள் நின்று கட்டுக் கடங்காத கருத்து வளங்களைச் சித்தர்கள் மாலையாகத் தொடுத்துள்ளனர்.

தமிழில் உள்ள இலக்கியங்களிலிருந்து பொன்மொழிகளைத் தேடித் தொகுக்க முயல்பவர்களுக்குச் சித்தர் பாடல்கள், பொன் மொழிக் களஞ்சியமாகக் காட்சி தருகின்றது. நெஞ்சில் பதியும் வண்ணம் கூறும் பாங்கு,

*சிறந்த சொல்லாட்சி, புதுமைக் கருத்து ஆகியவை நிரம்பியுள்ள பொன்மொழிகளாக தனிமனித ஒழுக்கச் சிந்தனைகளை சித்தர்கள் பாடல்களில் காணமுடிகிறது.*

**துணை நூற்பட்டியல்**


1. *சித்தர் பாடல்கள் ஓர் அறிமுகம், மணிவாசகர் பதிப்பகம். சிதம்பரம், முதற் பதிப்பு: டிசம்பர், 1987.*
2. *சித்தர் நெறிகள், தொகுதி -1, செம்மூதாய் பதிப்பகம், ஏ3, அபிராமி நிவாஸ், எண். 43, வால்மீகித் தெரு, கிழக்குத் தாம்பரம், சென்னை, முதற்பதிப்பு: ஜுலை, 2013.*
3. *சித்தர்களின் வரலாறும் வழிபடும் முறைகளும், ம.சு.பிரம்மதண்டி, கற்பகம் புத்தகாலயம், 4/2, சுந்தரம் தெரு, (நடேசன் புங்கா அருகில்) தியாகராஜ நகர், சென்னை. பதிப்பு: ஏப்ரல், 2012.*